27th March 1963]

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், மாவட்டங்களிலிருந்து அங்கத்தினர் களெல்லாம் கலந்து கொண்ட மாநாடு ஒன்று சென்னையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் என்னென்ன தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்குத் தனி கேள்வி போட வேண்டும்.

திரு. ப. கா முத்துவேலப்ப கவுண்டர் : ஸார், கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்கிறவர்களுக்கு சர்க்கார் ஏதாவது பரிசு கொடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : If I may be permitted to say Sir, கல்யாணம் ஆகாதவர்களுக்கும் குழந்தை பிறக்கலாம் !

திரு. ஆர். ரங்கசாமி : ஸார், சில இடங்களில் அறுவை சிகிச்சை செய்வதற்கு டாக்டர்கள் இல்லாமலே இருக்கிறது. அந்தமாதிரி இருக்கக் கூடிய இடங்களில் தனிப்பட்ட டாக்டர்கள் அறுவை சிகிச்சை செய்வதற்கு அனுமதி கொடுக்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பிரைவேட் டாக்டர்கள் பலர் குடும்பக் கட்டுப்பாட்டிற்காகச் செய்யப்படும் 'வாசக்டமி' ஆபரேஷனில் டிரெயினிங் பெற்ற பிறகு அங்கு உதவி டாக்டர்களாகப் போடப்படுகிறார்கள்.

திரு. வி. ராமநாதன் : ஸார், பஞ்சாயத்து யூனியன் முறை நாட்டில் ஏற்பட்ட பிறகு இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கிராமங்களிலே வெற்றி பெற்று இருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினருக்கு நன் ருகத் தெரியுமென்று நினைக்கிறேன்.

திரு. எம். குழந்தைசாமி கவுண்டர் : ஸார், ஒரு பெண்ணை கல்யா ணம் செய்து கொண்டவுடன் அந்தப் பெண்ணை விட்டுவிட்டு வேறொரு பெண்ணை கல்யாணம் செய்துகொள்வதைத் தடுக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்கெல்லாம் தனிப்பட்ட சென்ஸஸ் எடுக்க வேண்டுமென்பது சிரமம்.

திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, "ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி, மூங்கில் போல் கிளை கிளைத்து முசியாமல் வாழ்ந்திருக்க" என்று திருமணச் சடங்கு கள் போது ஆசிர்வாதம் பண்ணுகிறோம். அப்படி இருக்கும்போது குடும் பக்கட்டுப்பாடு திட்டம் எதற்கு ? ஒன்று குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை எடுத்துவிடுமா ? அல்லது ஆசீர்வாதம் செய்வதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கையாவது எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : குடும்பக் கட்டுப்பாட்டின்படி மூன்று நான்கு பிள்ளைகள் பெற்ற பிறகு கட்டுப்படுத்த வேண்டுமென்று இருக்கிறது. அந்தப் பிள்ளைகளை நன்றாக வளர்த்தால் போதும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், குடும்பக்கட்டுப்பாடு பற்றிய பிரச்சார படங்களில் மூன்று பிள்ளைகள் தான் போடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கும் மூன்று குழந்தைகள் என்று . . . .

[மணியடிக்கப்பட்டது.]

Government Estate (Quarters)

* 391 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the number of houses in the Government Estate, Madras;

(*b*) the number of houses allotted to Members of the Legislative Assembly and Members of the Legislative Council;

(*c*) the number of houses allotted to Government Officials;

(*d*) whether houses are allotted to out-siders and if so, the number allotted;

(*e*) the number of houses vacant at present; and

(*f*) whether any applications have been received for the occupation of these houses?

THE HON. SRI V. RAMAIAH : (a) 228 houses.

(*b*) 7 houses.

(*c*) 213 houses.

(*d*) Yes, 8 houses.

(*e*) 1 house.

(*f*) Yes. The one vacant quarters is reserved for allotment to Members of the State Legislature and the matter of allotment is under consideration of the Government.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், இப்போது அநேக வீடுகள் தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படி இருந்தால் அவைகளைக் காலி செய்து அந்த வீடுகளை சட்டசபை அங்கத்தினர்களுக்கு கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : தனியார் யாரும் அந்த வீடுகளில் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. கே. மூக்கையா தேவர் : ஸார், சட்டசபை அங்கத்தினர்களுக்கு வீடு கிடைப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. நேற்று ஒரு அங்கத்தினர் இடமில்லாமல் வெளியே சென்று தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே போதிய ஏற்பாடுகளைச் செய்து எல்லோருக்கும் வீடு கிடைக்க வசதி செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : அரசாங்கத்தினுடைய முயற்சி சட்டசபை அங்கத்தினர்களுக்கு தங்குவதற்கு வசதி செய்து கொடுப்பதுதான். சமீபத்தில் எடுத்த முயற்சியால் கூட நியூ ப்ளாக்கில் நான்கு ரூம்கள் காலி செய்யப்பட்டு சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய பெரிய கட்டிடங்களிலுள்ள அலுவலகங்களை எல்லாம் மாற்றி அவைகளை சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படுவது பற்றிய பரிசீலனையை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படுகிற வீடுகள் கட்சி வாரியாகக் கொடுக்கப்படுகிறதா ? அப்படியானல் எத்தனை வீடுகள் ஒவ்வொரு கட்சிக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா : இருக்கக்கூடிய வீடுகள் மிகவும் குறைவு. கட்சிவாரியாகக் கொடுக்கும் உத்தேசமில்லை. அங்கத்தினர் இந்த மாதத்தில் நடைபெற்ற "ஹவுஸ் கமிட்டி" கூட்டங்களுக்கு வந்திருந்தால் தெரிந்திருக்கும். அங்கத்தினர்கள் எல்லோரையும் ஒரு அமைப்பாக வைத்துத்தான் வீடுகளை அவர்களுக்குக் கொடுக்கிறோம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சென்னையில் சொந்த வீடு கட்டிக்கொண்டிருக்கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் அரசாங்க வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா ? அப்படியானல் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

27th March 1963]

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்தத் தகவல் இப்போது என்னிடம் இல்லே.

துவக்கப் பள்ளிகள் [பஞ்சாயத்து யூனியன்கள்]

* 392 கேள்வி.—**திரு. சி. மா. அம்பிகாபதி :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து கூட்டுமன்றங்கள் அமைந்ததற்கு பின் ஆரம்பப் பள்ளிகளில் கல்வித்தரம் குறைந்துள்ளதா ? அல்லது உயர்ந்துள்ளதா ?

(இ) கல்வி நிர்வாகத்தை பஞ்சாயத்து நிர்வாகத்தில் இருந்து பிரித்து முன்னர் இருந்ததுபோல் கல்வித்துறையினரிடமே விட்டுவிடும் நோக்கம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) இதைப்பற்றிய மதிப்பீடு ஒன்றும் செய்யப்படவில்லே.

(இ) இல்லே.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No assessment has been made.

(*b*) No.

Bye-Elections (Madras Legislative Assembly)

* 393 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Election Commission have consulted the State Government regarding the programme for holding the bye-elections to the Assembly seats rendered vacant recently;

(*b*) if so, the views offered by the Government; and

(*c*) the reasons for not suggesting the abeyance of these bye-elections for the period of National Emergency?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) and (*b*) The Election Commission has, after consulting the Government of India, decided that it is no longer necessary or desirable to hold up the bye-elections in view of the improvement in the emergency situation. The State Government was not consulted in the matter. The Election Commission is the final authority under the electoral law in deciding the issue.

(*c*) Does not arise.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், இப்போது உபதேர்தலில் எல்லா சுதந்திரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் பாதுகாப்புச் சட்டத்தைத் தளர்த்த முடியாது என்று நம்முடைய உள்துறை அமைச்சர் திரு. லால்பஹதூர் ஸாஸ்திரி அவர்கள் கூறியிருப்பது முரண்பாடாக இல்லேயா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதிலே முரண்பாடு ஒன்றும் இல்லே. உபதேர்தலில் நிற்கின்றவர்களுக்கு எல்லா பேச்சு சுதந்திரங்களும் உண்டு. பாதுகாப்பு விதிகளுக்கு முரண்பாடாகப் பேசவேண்டிய அவசியம் இல்லே.

திரு. செ. சதாசிவம் : தலேவர் அவர்களே, பஞ்சாயத்துக்களில் பஞ்சாயத்துத் தலேவர்கள் இடம் காலியானுல் அதற்கும் தேர்தல் நடத்தக் கூடாது என்று அரசாங்கம் மெமோராண்டம் அனுப்பி இருக்கிறதா ? அப்படி இருந்தால் பஞ்சாயத்துக்களில் உபதலேவர்கள் வேலே செய்யும் போது அவர்கள் பஞ்சாயத்து யூனியன்களிலே அங்கத்தினர்களாக இருக்க முடியாத நிலேமை இருப்பதால் அதற்கும் எலெக்ஷன் நடத்த அரசாங்கம் உத்திரவிடுமா ?